# கந்தளாயில் காட்டுத் தீ: விவசாயப்படை

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

யாழ்ப்பாணம் இல. 49 | ஆண்டு 10
போன் 889 | இதழ் 187
National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆ. 32 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (16-8-68)


## முகாமும சேதம்

கந்தளாய், வியாழன் கந்தளாயில் இன்று அதிகாலை காட்டுத்தீ பிடித்து நான்கு சதுரமைல் பரப்பளவில் பெரும் தீவிபத்து ஏற்பட்டது. விவசாயப்படை முகாமும் தீவிபத்துக்குள்ளாகியது. சுமார் எண்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான விவசாயப்படை முகாம் விவசாய உபகரணங்கள் சேதமடைந்தன.

காட்டுத்தீ பரவத் தொடங்கியதும் இப்பகுதியிலுள்ள மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நாடி ஓடத் தொடங்கினர். இப்பகுதியில் சென்ற சிலவாரமாக நிலவிவரும் கடும்வரட்சியும் கடும்காற்றும் தீபரவுவதற்கு காரணமாக இருந்தது. தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயப்படை முகாமை நேரில் பார்வையிடுவதற்காக விவசாயப் படை கமிஷனர் ஸ்தலத்துக்கு விரைந்துள்ளனர் எனினும் தீயினால் காயமேற்படவில்லை.

சில தினங்களுக்கு முன் அம்பாறைப் பகுதியிலும் இதே போன்ற காட்டுத்தீ ஒன்று ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# "ஆட்சிமன்ற முறையால் அமைதி குலைந்துவிட்டது

## சுதந்திரத்தினால் எவருக்கும் பயனில்லை"

### முற்றவெளி கூட்டத்தில் எஸ்.டி.பண்டாரநாயகா

யாழ்ப்பாணம், வெள்ளி "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் சுதந்திரம் என்ற பெயரில் ஆட்சிமன்ற அமைப்புமூலம் இங்கு பெரும்பான்மைச் சமூகத்தவருக்கும் சிறுபான்மைச் சமூகத்தவருக்கும் நிம்மதியாக வாழ்வதற்கான வழியில்லாமல் செய்துவிட்டார்கள். இப்போது இருசமூகத்தவரும் சுதந்திரமாக இருக்கவில்லை. எந்த விதப் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய நிலையிலுமில்லை."

இவ்வாறு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்று நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி [சீனசார்பு] கூட்டத்தில் பேசிய கம்பகா எம்.பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா கூறினார்.

திரு. வி. ஏ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பண்டாரநாயக்கா மேலும்பேசுகையில் கூறியதாவது:-

450 வருடகால அந்நிய ஆட்சியின்பின் மக்கள் தமது பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாத நிலையில் இப்போ இருந்துவருகிறார்கள்.

சிங்களப் பகுதிகளில் பிற்போக்கு முதலாளித்துவ வகுப்பினர் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளான யு. என். பி., சுதந்திரக்கட்சிகள் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக சிங்களமக்களைத் தமிழ் மக்களுக்கெதிராகத் தூண்டியும் தமிழ்ப்பகுதியில் சமஷ்டிக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழ் மக்களைச் சிங்களமக்களுக்கெதிராகத் தூண்டியும் வாக்குகளைப் பெறுவதற்காக முயற்சிசெய்து ஆட்சிமன்றத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள்.

ஆட்சிமன்றத்தில் இருசமூகங்களையும் பிரதிநிதித்துவம் வகிக்கும் இந்த பிற்போக்குவாதிகள் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்து மக்களை முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதநிலையில் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நிலைமை மோசமடைந்து கொண்டே இருக்கும்.

பார்லிமென்டரி முறை அர்த்தமற்றது என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. நூறுவருடங்கள் சென்றாலும் இந்த முறையில் பிரச்சினைகள் தீர்த்துக்கொள்ள முடியாது.

1957-ம்வருடத்தில் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் இதனை இந்நாட்டிலுள்ள பிற்போக்குவாதிகளும் அவர்களது அடிவருடிகளும் இதனை அமுல்நடத்த விடாது தடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

1956-ம் வருடத்தில் காலஞ்சென்ற பிரதமர்

[6ம் பக்கம் பார்க்க]

#### யாழ். மாநகரசபை தேர்தலில்

## தமிழரசு எங்கே - அங்கே காங்கிரசும் நிற்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழ்க்காங்கிரஸ் பொதுச்சபைக் கூட்டம் நேற்றுக்காலை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றபோது, எதிர்வரும் யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கான விஞ்ஞாபனம் பரிசிலனைசெய்து சில திருத்தங்களுடன்சபையில் ஆமோதிக்கப்பட்டது. அதை வெளியிடும் அதிகாரம் கொண்ட உப கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது.

தலைவர் வேண்டுகோளின்படி, தமிழரசுக்கட்சி போட்டியிடும் வட்டாரங்களில் நேரடியாகத் தமிழ்க் காங்கிரஸ்கட்சி போட்டியிடவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. சில வட்டாரத்தில் தமிழரசு ஆதரவாளர் சுயேச்சையாகப் போட்டியிட்டால் அதே வட்டாரத்தில் காங்கிரஸ் ஆதரவாளர் சுயேச்சையாக போட்டியிடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

19 வட்டாரங்களில் தமிழ்க் காங்கிரஸார் கட்சி ரீதியாகப் பொட்டியிடுவார்களென்றும், 4 வட்டாரத்தில் கட்சி ஆதரவுடன் சுயேச்சையாகப் போட்டியிடுவரென்றும் தெரிகிறது.

தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் இத்தேர்தலில் போட்டியிடுவாரென்றும், 13ம் வட்டாரத்தில் ஒரு பெண் போட்டியிடுவாரென்றும் தெரியவருகிறது. [ந.நி]

#### ஆலயப்பிரவேசம்

## சைவ அனுட்டான சபை தெரிவிக்கும் யோசனை

அளவெட்டி, வெள்ளி "சமய வழிபாட்டு முறையில் பாரம்பரியமான ஒழுங்குகளை அனுசரிக்க விரும்பாதவர்கள் தம்மனதில் பிரித்து தமக்கிஷ்டமான ஆலய வழிபாட்டு முறையை அனுசரித்துக்கொண்டு பாரம்பரியமான ஒழுங்கை விரும்புகிறவர்களுக்கு இடைஞ்சலில்லாமல் நடந்துகொள்ளும் முறையை சில சமயங்கள் அனுசரணையிற் கொண்டு காட்டியிருக்கின்றன. இதே முறையைப் பின்பற்றி தமது சைவாலயங்களில் தாமாக விரும்பி இதுவரை ஆலயப்பிரவேசத்தை ஏற்றுக்கொண்ட கோவில்கள் தாம் விரும்பிய விதத்தில் நடந்துகொள்வதற்கும் இதை விரும்பாது பாரம்பரியமான முறையில் நடக்க விரும்பும் ஆலயங்களை அவற்றின் விருப்பப்படி நடந்து கொள்ளவும் எவ்வித குந்தகமுமில்லாமல் விடப்பட வேண்டும்.

இதுவே தற்போது ஆலயப்பிரவேசம் பிரச்சனைக்கு மாணக்கூடிய ஒரு சுமுகமான முடிவு."

அகில இலங்கை சைவ அனுட்டானசபையினர் கீரிமலையில் நடத்திய கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கீரிமலை சிவன்கோவில்மண்டபத்தில் அகில இலங்கை சைவஅனுட்டான சபை திரு. த. சிவலிங்கம் ஜே.பி. தலைமையில் கூடியபோது ஆலயப்பிரவேசப் பிரச்சினை பற்றியும், மற்றும் ஆலய விஷயங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்துக்கு கும்பிளாவளைப்பிள்ளையார் கோவில் நிர்வாகி திரு. மயில்வாகனம், அகில இலங்கை சைவசித்தாந்த சபை தலைவர் ஓ. பாலசுந்தரக் குருக்களும் மற்றும் பல கோவில்களைச் சேர்ந்த தர்மகர்த்தாக்களும் கலந்

[6-ம் பக்கம் பார்க்க]

## தொலைபேசித் தொடர்பு

யாழ்ப்பாணம், வெள்ளி நேற்று முன்தினம் பகல் 12 மணியிலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு டெலிபோன் தொடர்பு இருக்கவில்லை. கொழும்புக்கு டெலிபோன் தொடர்பு கேட்கும் சமயங்களில் எல்லாம் 'லைன் அவுட் ஒவ் ஆடர்' எனப் பதில் கிடைத்ததாகப் பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

கொழும்பு தொலைபேசிச் சேவை அடிக்கடி இந்நிலைக்குள்ளாவதால் பாவனையாளர் பெரிதும் அசௌகரியத்துக்குள்ளாகின்றனர்.

#### தீவுப்பகுதி வாசிகளுக்கு

## அடுத்தடுத்து மூன்று முதல் பரிசுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி தேசிய லொத்தர் சபையின் 206வது சீட்டிழுப்பிலும் தீவுப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே முதற் பரிசு கிடைத்துள்ளது. 204 வது சீட்டிழுப்பிலும், 205 வது சீட்டிழுப்பிலும் தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே முதற்பரிசு கிடைத்ததென்பது வாசகர்கள் அறிந்ததே.

206வது சீட்டிழுப்பில் அனலைதீவைச் சேர்ந்த திரு. வி. கே. சுப்பையா என்பவருக்கு முதற் பரிசுக்குரிய ஒரு லட்சம் ரூபாய் கிடைத்

(6-ம் பக்கம் பார்க்க)

## 80 உப-கார்ட்டுகள் வைத்திய லீவில்

அளவெட்டி, வெள்ளி இலங்கையிலுள்ள புகையிரதப்பகுதி உதவி கார்ட்மார்களின் திடீரென ஒத்துழையாமை இயக்கத்தில் இறங்கியதனால் புகையிரத சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இம்மாதம் 12-ந் திகதி முதல் சுமார் 80 உபகார்ட்கள் வைத்திய லீவில் சென்றுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்பு ரயில்வே கார்ட்மார் சங்கத்துக்கும், புகையிரதப் பகுதி நிர்வாகிகளுக்குமிடையில் போக்குவரத்து அமைச்சர் ஒரு உடன்பாடுசெய்து வைத்தது தெரிந்ததே. அதில் இப்போது நடைமுறையிலிருக்கும் கடமை முறைப்படியில் பாதுகாவலர்கள் தகுந்த ஓய்வுபெற முடியாமலும், குறிப்பிட்ட நேரத்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நம் மனதிலுள்ள வெறுப்புகளை, கோப தாபங்கள், ஆசைகள் இவை நீங்கினாலே தெய்வ அருள் சுரக்கும். சிறிது காலம் சூழ் நிலையை மாற்றி தனித்து இருந்து தியானித்தால், மனம் சுத்தமாகி, வெறுத்தவரை நேசிக்கவும், சாந்தியும் அன்பும் பெருகவும் வழிபிறக்கும்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna.
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை
ஆடி மாதம் 32-ந் திகதி
(16-8-68)


## சோஷலிஸ சமுதாயம்

இலங்கையில் சோஷலிஸ அரசாங்கத்தை நிறுவ உதவுவதே இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் இலட்சியமென்றும் இதற்கு அனுசரணையாக சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்று திரட்டிப் பாடுபட இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி தயங்காதென்றும் கல்முனையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் இரண்டாவது மகாநாட்டில் முன்னணியின் தலைவர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூது தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டிருக்கிறார். முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருவித விழிப்புணர்ச்சியை சோஷலிஸ முன்னணி ஏற்படுத்தியிருக்கிறதென்பதில் முன்னணியின் தலைவர் பெருமைப்படுவதில் நியாயமிருக்கிறது.

'சோஷலிஸம்' என்பதற்கு 'சமதர்மம்' 'சமத்துவம்' என்பதுதான் அர்த்தம். ஒவ்வொரு சமுதாயமும் இன்று சோஷலிஸத்தையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறது. சமத்துவ சமதர்ம சமுதாயத்தை அமைப்பதை இலட்சியமாகக் கொண்டிருப்பினும் அந்த இலட்சியத்தை அடையும் நோக்கில் வேறுபாடு இருக்கிறது. நமது நாட்டிலுள்ள அரசியல், சமூக ஸ்தாபனங்கள் அனைத்தும் தங்கள் கொள்கையும் இலட்சியமும் 'சோஷலிஸம்' என்றே கூறிவருகின்றன. இன்று ஆட்சிபீடத்திலுள்ள தேசிய அரசாங்கம் 'ஜனநாயக சோஷலிஸ' மேதங்கள் கொள்கையும் இலட்சியமும் என்று கூறுகிறது. எதிர்க்கட்சிக் கட்சியின் கொள்கையும் 'சோஷலிஸம்' தான். புரட்சிவாத லங்கா சமசமாஜக் கட்சி, புரட்சிவாத சமசமாஜக் கட்சி, சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளும் 'சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்துவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கின்றன. திரு. ஆர் ஜி சேனநாயகாவின் புதிய 'சிங்களமக்கள் கட்சி'யும் தனது இலட்சியம் 'சோஷலிஸம்' தான் என்று கூறுகிறது. 'சோஷலிஸம்' என்பதற்கு பலரும் தத்தமக்கு ஏற்றபடி வியாக்கியானம் செய்கின்றனர். தங்கள் இலட்சியத்தை அடைவதற்கு வெவ்வேறு வழிவகைகளைக் கூறுகின்றனர்.

இலங்கை உட்பட உலக நாடுகளிலுள்ள மக்கள் அனைவரும் பாகுபாடின்றி சமூக சமத்துவத்துடன் வாழவே விருப்பம்கொண்டுள்ளனர். சமதர்மம் வேண்டுமென்பது அவர்கள் விருப்பம். இஸ்லாம் மதம்மட்டுமல்லா கிறிஸ்தவம், பௌத்தம், சைவம் ஆகிய அனைத்தும் பாகுபாடு காட்டவேண்டுமென்று கூறவில்லை. சமத்துவத்தையே அவை கூறுகின்றன. மதங்கள் அனைத்தும் அன்பினாலும் தியாகத்தினாலும் தான் நிலையான சமத்துவத்தை அடையமுடியுமென்று கூறுகின்றன.

'சோஷலிஸம்' எனும் சமத்துவ, சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதில் சமூகவேறுபாடோ, சமய வேறுபாடோ இருக்கக்கூடாது. சோஷலிஸம் சமயம், சமூகம், கட்சி அரசியல் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். கல்முனையில் நடைபெறும் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி மகாநாடு நாட்டில் பாகுபாடற்ற உண்மையான சோஷலிஸ சமுதாயம் ஒன்றை உருவாக்க வழிகாட்டுமென எதிர்பார்ப்போம்.

# ஈழம் வந்துள்ள தில்லைத் திருமுறைக் கழகப் பெரியார்



சிதம்பரத்திலிருந்து ஒரு பெரியார் இங்கு வந்திருக்கிறார். பெயர் கணபதிப் பிள்ளை, வயது 75-க்கு மேலாகிறது. தினசரி சிதம்பரேசனின் கோவிலுக்குச் சென்று பூஜா காலத்தில் தூபம் போடும் கைங்கரியத்தைச் செய்துவருகிறார்கள். சிவ பூஜா துரந்தரர். செல்வன் கழலேத்தும் செல்வச்சிறப்பு மிக்கவர்.

இலக்கண சுவாமிகள் என்ற ஈழத்தைச் சேர்ந்த ஸ்ரீமுத்துக்குமாரசாமி தம்பிரான் அவர்களிடம் பாடம் கேட்டு, அவருடன் பணி செய்து, அவருக்கு சீடர் போல இருந்தவந்தவர். சிதம்பரத்திலே, தம்பிரான் சுவாமிகளின் சமாதியையும் தர்மகாரியங்களையும் கவனித்து வரும் இவர், தில்லை திருமுறைக்கழகத் தலைவராவர்.

பாடல் பெற்ற தலங்கள் மொத்தம் 275-ல் ஈழத்திலுள்ள திருக்கேதீச்சரம் திருகோணமலை இவ்விரண்டும்தான் தரிசிக்கவேண்டிய பிள்ளை அவர்களையும் சென்னைக்குச் செல்லச் செய்தார். சட்ட நிபுணர் வீட்டிலே கலந்து பேசியும், தீட்சதர்கள் மனம்மாறவில்லை.

பின்னை அவர்கள் ஒரு சமரச யோசனை கூறினாராம். கனகசபை மேடை மீது தீட்சதர்கள் மட்டுமே இருந்து பூசை செய்யலாமென்றும், மற்ற எல்லாரும் கீழே நிற்கலாமென்றும் கூறியதை தீட்சதர்கள் ஒப்பவில்லை. அப்படிச்செய்தால் தங்கள் வருமானம் பெரிதும் குறைந்துவிடுமென்றும், சிதம்பர ரகசியத்தைக் காட்ட முடியாதென்றும் அவர்கள் கருதி அந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டனர்.

பின்னர் ஆறு மாதங்களில் அரசாங்கத்தார் சட்டம் செய்ததும், தீட்சதர்கள் எவ்வித ஆட்சேபமும் செய்யாமல் யாவரையும் ஆலயத்தில் வேற்றுமையின்றி அனுமதித்துவிட்டனராம். ஹரிஜனர் தலைவரான சுவாமி சகஜானந்தாவின் கட்டளை

### ஐயாறன் எழுதுவது

யது பாக்கி. அவற்றைத் தரிசிக்கவே இத்தள்ளாத வயதில் இப்போது ஈழம் வந்துள்ளார்கள். தமிழகத்திலே கும்பாபிஷேகம் நடக்கும் கோவில்களில் 12 திருமுறைகளை தமது கோஷ்டியுடன் பாராயணம் செய்துவரும் இவர் இவ்வாறு திருக்கேதீச்சரம் கும்பாபிஷேகத்தையும் தரிசித்து திருமுறை பணிசெய்ய ஆர்வம்கொண்டுள்ளார்கள்.

ஃ ஃ

சிதம்பரத்திலே ஆலயப் பிரவேசம் நடந்த கதையைக் கேட்டேன். தீட்சதர்கள் மிகப்பிடிவாதமாக இருந்தார்களாம். சென்னையிலே ஒரு பிரபல சட்ட நிபுணருடன் கலந்தாலோசிக்க மூன்று தீட்சதர்கள் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். அச்சமயம் அங்கு முகாம் செய்திருந்த ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி சங்கராச்சாரிசுவாமிகள் ஆலயப்பிரவேச பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துவைக்குமாறு கேட்டு, கணபதிப்

தீட்சதராகவும் இருந்து, பூசைகள் செய்வதாயும், அவர் ஓமக்குளத்தங்கரையில் ஒரு லட்சரூபாய் செலவில் கட்டியுள்ள சிவலோக நாதர் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தையும் நடத்தியதுடன், அங்கு ஒரு தீட்சதரே இருகாலப்பூசைசெய்து வருவதாகவும் பிள்ளையவர்கள் தெரிவிக்கிறார்.

ஆலயப் பிரவேசத்தைப் பற்றிக் கேட்டதற்கு, உலகம் போகிற போக்கிலே இதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டுமென்றும், ஆனால் ஸ்நானம்செய்து, தூய்மையாக திருநீறு அணிந்து, சிவ சிவ மந்திரம் சொல்லி எல்லாரையும் வரச்செய்ய வேண்டுமென்றும் இப்பெரியார் கருத்துத் தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்பாக ஜெர்மன் சுவாமி எனும் கௌரிபாலா அவர்கள் சிதம்பரம் கோவிலில் தரிசிக்கச் சென்றபோது தீட்சதர்கள் அவரை விட மறுத்ததாயும், பிள்ளையவர்களே வந்து, தீட்சதருடன் பேசி, அவரை அனுமதிக்கச் செய்ததாகவும் தெரிகிறது.

கொழும்பிலே கொச்சிக்கடை சிவன் கோவில் பூசையைத் தரிசித்த அவர், ஆகம முறைப்படி அங்கு பூசைகள் சிறப்பாக நடைபெறுவதாயும், தமிழகத்திலும் இவ்வி தம் பலர் செய்வதில்லை என்றும் கூறி பாராட்டினார்கள். கதிர்காமம், முனீச்சரம், கொழும்பு ஆடிவேல், திருகோணமலை, ஈழத்துச் சிதம்பரம் எனும் காரைநகர், நல்லூர், வண்ணை சிவன்கோவில்முதலியஇடங்களில் தூய கைங்கரியம் செய்து தரிசனம் செய்து, ஈழத்திலே சைவமும், சிவ பக்தியும் நிறைந்தோங்குவதைக் கண்டுமகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

அரசியல் முதலிய தற்காலிக பிரிவினைகள் என்ன இருப்பினும், திருமுறைகள் இரு நாடுகளையும் என்றென்றும் பிணைத்து நல்லுறவைப் பலப்படுத்துமென்பதில் ஐயமுண்டோ?

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் மணிக்கூட்டு கோபுர கும்பாபிஷேகம் எதிர்வரும் 19-8-68ம் திகதி நடைபெறவுள்ளது.

## சிறந்த தானம்

வல்வெட்டித்துறை, விசா. "நோயாளருக்குக் கொடுக்கப்படும் மத்திய போசனமான பாணுக்குப் பதிலாகச் சோறு வழங்குவது உண்மையான அன்னதானத் தர்மமாகும். வேறு இடங்களில் செய்யும் அன்னதானங்களிலும் மிகச் சிறந்தது நோயாளருக்குக் கொடுக்கப்படும் அன்னதானமேயாகும்."

இவ்வாறு வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியான திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை வல்வையைச் சேர்ந்த திரு. தம்பிராசா வாசுதேவர் என்பவர் வைத்தியசாலை நோயாளருக்கு மதிய உணவாக இலவசமாக சோறு வழங்குவதற்கு முன்வந்ததையிட்டு அவரைப் பாராட்டிப் பேசுகையில் கூறினார்.

நோயாளருக்கு உணவு வழங்கினர் ... கொடுத்ததற்காக திரு. வாசுதேவர் நன்றி கூறினார்.

## நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மூன்றாவது ஆண்டுவிழா

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன 3-வது ஆண்டுவிழா இன்று நடைபெறுகின்றது. அதன் நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

காலை 8 மணி: நாதஸ்வர கலாநிதி ஸ்ரீபத்மநாபன் கோஷ்டியினர் மங்கள இசைக் கச்சேரி.

காலை 10 மணி: விசேஷ அபிஷேக ஆராதனை.

நண்பகல் 12 மணி: சிறு குழந்தைகட்கு மகேஸ்வர பூஜை.

மாலை 3 மணி: மதுரை ஆதீனகர்த்தர்வரான சரமணி திரு. ஏ. பாலகிருஷ்ணன் கோஷ்டி நாதஸ்வரக் கச்சேரி.

மாலை 5 மணி ஆதீனத்திலிருந்து நல்லைக்கந்தன் ஆலய வீதி பஜனை.

இரவு 6-15—6-45 வரை நல்லைக்கந்தன் ஆலயத் திருப்புகழ் மண்டபத்தில் ஆதீன மாணவிகள் திருப்புகழ்க் கச்சேரி.

இரவு 6-45—7-45வரை திருப்புகழ் மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளால் கார்த்திகைப் பிரசங்கம்.

இரவு 9-15—11-15 வரை ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் சம்பூர்ண ராமாயண விரிவுரை.

மூவாண்டுப் பருவத்தின் தளிர் அரும்பி
முகிழ்க்கின்ற ஆதீனம், முலைப்பா லுண்டு
மூவாண்டில் அருட்பாடல் மொழிந்தவராய்
முதுஞான சம்பந்தர் அருளினாலும்
தேவாதி தேவன்திரு நல்லை வேலன்
திருவருளின் திறத்தாலும் சிவம் மணக்க
நாவாரத் திருமுறையின் நலம் பரப்பி
ஞாயிறெனப் பல்லாண்டு வாழி வாழி.

○

கல்லாரும் நெஞ்சினரும் கருத்துவந்து
கதியடையும் சைவமதப் பயிர் செழிக்க
பல்லாரும் பலகுலமும் பக்தி என்னும்
பழமருந்திப் பேரின்பப் பால் சுவைக்க
நல்லூரில் ஞானசம் பந்த ராதீ
னம்காக்கும் மேன்மைமிகு ஸ்வாமி நாதன்
சொல்லாரும் தம்பிரான் வாழி வாழி
தொழுமடியர் கூட்டமெலாம் வாழி வாழி.

— அளவையூர் சஞ்சீவி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'நாட்டின் பிரச்னைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகாண வேண்டும்'

## இந்தியாவின் 21-வது சுதந்திரதினத்தில் பிரதமர் இந்திரா உரை

புதுடில்லி, ஆகஸ்ட் 16

**இந்தியா, நேற்றுத் தனது 21-வது சுதந்திரதினத்தை அதிவிமரிசையாகக் கொண்டாடியது; காலையில், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி. தலைநகரிலுள்ள செங்கோட்டையில், தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.**

முன்னதாக, அவர் செங்கோட்டைக்கு வந்து சேர்ந்தபோது, முப்படையினரும் பொலிசாரும் அவருக்கு மரியாதை அணிவகுப்பு அளித்தனர். தேசிய கடேற் படையைச் சேர்ந்த 3,500 மாணவ, மாணவிகளும், மற்றும் 1500 பள்ளிக்கூடப் பிள்ளைகளும் மரியாதை அணிவகுப்பில் கலந்துகொண்டனர்.

செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து தமது சுதந்திரதின உரையை நிகழ்த்திய இந்தியப் பிரதமர், ஏருவிலிருந்து நாடு விலகுவதாகவும், ஒளியைக்காணத் தொடங்கிவிட்டதாகவும் தெரிவித்தார்.

'எல்லாப் பிரச்னைகளும் இன்னும் தீர்க்கப்படவில்லை. நாட்டில் நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ளது. இது, கைத்தொழிலுக்கும் உதவும் மக்கள் தொடர்ந்து உறுதியுடன் உழைத்தால், பிரச்னைகளைத் தீர்ப்பதுடன், சாதாரண மனிதனுக்குப் புதிய வாழ்வும் அளிக்க முடியும்' இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

### மக்கள் திரத்துக்கு பாராட்டு

கஷ்டங்களையும், பிரச்னைகளையும் சமாளிப்பதில் மக்கள் காட்டிவந்துள்ள திரத்தைத் திருமதி இந்திரா காந்தி பாராட்டினார்.

நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம், வரட்சி பற்றி அவர் குறிப்பிட்டார். அப்பகுதி வாழ்மக்களுக்கு அவர் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார். அவர்களுக்கு அரசாங்கம் தன்னாலான உதவிகளைச் செய்யும் என அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் அமைதியையும் ஒற்றுமையையும்நிலைநாட்ட வேண்டிய அவசியத்தையும் திருமதி இந்திரா எடுத்துரைத்தார்.

### அமைதி முறையில் தீர்வு

நாட்டின் சில பகுதிகளில் சில கோரிக்கைகள் வலியுறுத்தப்படுவதாகக் குறிப்பிட்ட பிரதமர், அவற்றுக்கெல்லாம் அமைதியான முறையில் தீர்வுகாணவேண்டுமென்று கூறினார். பலாத்காரத்துக்கு மக்கள் இடமளிக்கக்கூடாது என்றார் திருமதி இந்திரா காந்தி. இதில் அரசாங்கத்துக்கு மட்டுமின்றி, எல்லா அரசியல் கட்சிகளுக்கும், சாதாரண பொதுமக்களுக்கும் பொறுப்புண்டு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு சிறிய கோஷ்டி நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க அனுமதிக்கப்படக்கூடாது என்று அவர் குறிப்பிட்டார். சிறுபான்மை மக்களுக்குத் தீங்கு இழைக்கப்படவும் விட முடியாது என்றார் அவர்.

### ரஷ்ய ஆயுதம்

பாகிஸ்தானுக்கு சோவியத் ரஷ்யா ஆயுதங்கள் அளிக்க முடிவு செய்திருப்பது பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில், அது வேதனை தருவதாகும் என்று கூறினார் அது சரியான முடிவல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். ஆனால் அதற்காக மக்கள் கலங்கத் தேவையில்லை என்றும் எல்லைகளில் பாதுகாப்புப்படைகள் உறுதியுடனும், விழிப்புடனும் இருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

### பாகிஸ்தான்

போரில்லைக்கு உடன்படிக்கைபொன்றைப் பாகிஸ்தானுடன் செய்துகொள்வதற்கு இந்தியா முன்வந்துள்ளதைப் பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமெனப் பிரதமர் இந்திரா பாகிஸ்தானைக் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவுக்கெதிரான ஒரு சூழ்நிலையைப் பாகிஸ்தான் உருவாக்கிவருவதையிட்டுத் திருமதி இந்திரா காந்தி கவலை தெரிவித்தார்.

இந்தியாவின் ஒற்றுமைக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் தொடர்ந்து உழைக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

### ராஷ்டிரபதி வானொலி உரை

நேற்று முன் தினமிரவு, நாட்டு மக்களுக்கு விடுத்த விசேஷ வானொலி உரையில் நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் பணியில் ஒற்றுமையுடனும், உறுதியுடனும் உழைக்குமாறு இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் கேட்டுக்கொண்டார்.

உலகிலுள்ள நிலப்பரப்பின் 2.4 சதவீதக் குறுகிய பகுதியினுள், உலக ஜனத் தொகையின் 14 சதவீத மக்கள் தொகையை உள்ளடக்கியுள்ள இந்தியாவை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னைகள் மிகப் பெரியவை என்று ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.

### இந்தியத் தேசியம்

பல்வேறு இனங்களைக் கொண்ட இந்திய நாட்டில் சமஷ்டி ஜனநாயகம்வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது பெருமைக்குரியதாகுமென்று டாக்டர் சாகிர் ஹுசெயின் கூறினார். இத்தனை வேறுபாடுகளுக்கிடையேயும் இந்தியா, தனது கலாசார ஒருமைப்பாட்டைப் பேணிக் காத்து வருவதையும் அவர் குறிப்பிட்டார். இந்தியத் தேசியம், ஒரு நல்லசர்வதேசத் தேசியத்தை உருவாக்க உதவுமெனத் தாம் நம்புவதாக அவர் கூறினார்.

---

## சுரங்கத்திலகப்பட்ட 3 தொழிலாளிகள்

வாஷிங்டன் ஆக. 15

அமெரிக்காவில், மேற்கு வேர்ஜினியாவில், கரை விழுந்ததால், நிலக்கரிச்சுரங்கத் தொழிலாளிகள் மூவர் சுரங்கத்தினுள் அகப்பட்டுக்கொண்டனர். நாலாவது ஒருவர் ஒருவாறு தப்பி வெளியே வந்துவிட்டார்.

கீழே அகப்பட்டுள்ள மூன்று தொழிலாளிகளையும் மீட்பதில் அவ்வளவு நம்பிக்கையிருப்பதாகத் தெரியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கலைஞர்களுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

'நிர்மலா' திரைப்படக் கலைஞர்களுக்கு நவாலி கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினரால்பாராட்டுவிருந்துபசாரம் ஒன்றளிக்கப்பட்டது.

கிராமசபை உறுப்பினர் திரு. என். ஜெயசிங்கம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. 'நிர்மலா' படத் தயாரிப்பாளர் திரு. ஏ. ரகுநாதன் கலைஞர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

வண. பிதா இக்கொக், டபிள்யூ. ஜி. அன்னப்பா, திரு. என். இன்னத்துரை, திரு. என். இன்னத்துரை, திரு. எம். ஞானசிகாமணி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். கலைஞர் சார்பில் ... ஆகியோர் நன்றிதெரிவித்தனர். [கா. நி]

---

## ஹெலிகொப்டர் விழுந்து 21 பேர் மாண்டனர்

### 'டிஸ்னி உலகம்' பார்க்கப் புறப்பட்ட உல்லாசப் பிரயாணிகள்

வாஷிங்டன், ஆக. 15

அமெரிக்காவில், கலிபோர்னியாவிலுள்ள லொஸ் அஞ்செல்ஸில், ஒரு ஹெலிகொப்டர்விமானம் விழுந்து நொருங்கியதன், விளைவாக அதிலிருந்த 21 பேரும் உயிரிழந்தனர்.

அந்த ஹெலிகொப்டர் விமானத்திலசென்றுகொண்டிருந்தவர்கள், உல்லாசப் பிரயாணிகளாவர். ஹொலிவூடிலுள்ள வால்ட்டிஸ்னியின் 'டிஸ்னி உலகத்'தைக் காவைப் பார்க்க அவர்கள் இவ்விமானத்தில் புறப்பட்டிருந்தார்கள்.

---

## 5 பாடங்களில் பரீட்சை

### வ.இ.த. ஆசிரியர்சங்கம் நடத்தும்

யாழ்ப்பாணம், வெள்ளி

இவ்வருடம் வடஇலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பரீட்சை அரசினர் புதியபாடத்திட்டமை நடைபெறஇருப்பதால் ஒவ்வொரு பாடத்திற்கும் 5 பேர் கொண்ட உபகுழு நியமிக்கப்பட்டு, புதிய பாடத்திற்கு அமைய மாதிரி வினாப்பத்திரங்கள் தயாரித்து ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பப்படவேண்டும்' எனத் தெரிவிக்கும் ஒரு தீர்மானம் வட இலங்கை தமிழ் ஆசிரியர் பரீட்சை ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பண்டிதர் எஸ். கே. தம்பையா தலைமையில் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சென்ற முறை தமிழ், கணிதம், சூழல் ஆங்கிலம் போன்ற பாடங்கள் பரீட்சிக்கப்பட்டன என்றும் இவ்வாண்டில் சமய பாடத்தையும் சேர்த்து 5 பாடங்கள் பரீட்சிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை கார்த்திகை மாதம் பிற்பகுதியில் நடத்தப்படவிருக்கின்றது விண்ணப்பப்பத்திரங்களும், மாதிரி வினாப்பத்திரங்களும் பரீட்சை பற்றிய அறிவுறுத்தலும் புரட்டாதி மாத முற்பகுதியில் எல்லாப்பாடசாலைகளுக்கும் கிடைக்கக்கூடியதாக பரீட்சைக் காரியதரிசிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும்தீர்மானிக்கப்பட்டது. (த. நி.)

---

## சமய சமரச கருத்தரங்கு

உடுப்பிட்டி, வியாழன்

இலங்கை சட்டக்கல்லூரி மாணவர் இந்து மகாசபையின் சமய சமரச கருத்தரங்கு வரும் 17-ந் திகதி மாலை 3 மணிக்கு சட்டக்கல்லூரிப் பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

சமயசமரச மகாநாட்டில் இந்துமதப் பிரதிநிதியாக இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீ ரெங்கானந்தஜி சுவாமியும், பௌத்த மத பிரதிநிதியாக இந்து பௌத்த சகோதரத்துவ சங்கத் தலைவர் வண. பண்டிச நாயக்கதேரோவும் கிறிஸ்தவ கத்தோலிக்க மத சார்பில் கனன் சட்டத்தில் கலாநிதித்துவம் பெற்ற வண. மேலின் வேர்ஜண்டோவும், இஸ்லாம் மதப் பிரதிநிதியாக இலங்கைப் பல்கலைக்கழக அரபு மொழிப் பேராசிரியர் கலாநிதி எஸ். ஏ. இமாமும் கலந்துகொள்வர்.

இந்து மகாசபைத் தலைவர் திரு. வி கே. நீலகண்டன் தலைமையில் நடைபெறும் இம்மகாநாட்டைச் சட்டக்கல்லூரி அதிபர் உயர்திரு. இராஜா குணசேகரா ஆரம்பித்து வைப்பார். இதனையொட்டி ஒரு விசேஷ மலரும் வெளியிட்டு வைக்கப்படும்.

நீதியமைச்சர் திரு. ஏ. எல். விஜயமான்னே இந்த மாணவர்களின் இம்முயற்சியைப் பாராட்டி வாழ்த்துச்செய்தி அனுப்பி வைத்துள்ளார்.

---

## அருணகிரிநாதர் விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம். வெள்ளி

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தினர் நடாத்தும் அருணகிரிநாத சுவாமிகள் விழாவும், இசைவிழாவும் இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்குவீதியில்அமைக்கப்படும் 'அருணகிரிநாதர் அரங்கில் திரு. எம். திடவீரசிங்கம் தலைமையில் ஆரம்பமாகும். இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-00 மணிக்கு மாவை ஆதீன வித்துவான்களின் நாதஸ்வர அஞ்சலி, 6-30 மணிக்கு. மன்றகீதம், 6-40 மணிக்கு, வில்லிசைக் கச்சேரி, 7-00 மணிக்கு மிருதங்க வாத்திய இசை, 8-00 மணிக்கு சொற்பொழிவு 'எமது நோக்கமும் திட்டமும்', 8-10 மணிக்கு இன்னிசைக் கச்சேரி, 0-15 மணிக்கு நாடகம் [த. நி.]

---

## 4 வருடங்களாக இளைஞரை காணவில்லை

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து காணாமற்போன இளைஞர் ஒருவரை நான்கு வருடங்களாகியும் இன்னும் காணவில்லையாம்.

மேற்படி இளைஞரின் பெற்றோர் தம் புதல்வன் இறந்திருக்கக்கூடுமென பெருங்கவலை கொண்டிருந்தபோதிலும் இப்போது கிடைத்துள்ள சில தகவல்கள் மூலம் தம் புதல்வனை யாரோ கடத்திச் சென்றிருக்கலாமெனத் தெரியவந்துள்ளதாம்.

சாவகச்சேரி கென்மன் வீதியில் வசிக்கும் திரு. இரத்தினம் என்பவரது புதல்வரான நடராசா என்பவரே இவ்விதம் காணாமற்போன இளைஞராவார். இந்த இளைஞர் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வீட்டிலிருந்து காணாமற் போனார். அப்போது இவருக்கு வயது 16.

---

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - ஆஸ்பத்திரியில்

# சத்திர சிகிச்சைக்கு புதிய வார்ட்டுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் மேல் மாடி வார்ட் அடுத்த மாதம் திறக்கப்படும்போது இங்கு நிலவும் இடவசதியின்மை ஓரளவு நீங்கும் என ஆஸ்பத்திரி அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

தற்போது இங்குள்ள ஆண்கள் சத்திரசிகிச்சை வார்ட்டான 3-ம், 10-ம் இலக்க வார்ட்டுகள் புதிய மேல் மாடியைக்கொண்ட வார்ட் திறக்கப்பட்டதும் அங்கு மாற்றப்படும் ... வேலை ... யில் புதிய பெண்களுக்கான சத்திரசிகிச்சை வார்ட் ஒன்றும் தற்போதுள்ள 3-ம் வார்ட்டில் அமைக்கப்படும். தற்போது பெண்களுக்கு சத்திரசிகிச்சைக்காக 4-ம் இலக்க வார்ட் மட்டும் இருப்பதால் ஏற்படும் நெருக்கடியைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது ஆண்களுக்கு வைத்தியசிகிச்சைக்கு 14'ஏ' 14'பி' என இரு வார்ட்டுகள் இருப்பது போல பெண்கள் வைத்திய சிகிச்சைக்கும் புதிய ஒரு வார்ட் இங்கு அமைக்கப்படவிருக்கின்றது. பெண்கள் வைத்திய சிகிச்சைக்கு இப்போது 6ம் இலக்க வார்ட் மட்டும் இருந்து வருகின்றது. தற்போதுள்ள 10 ம் இலக்க வார்ட் அடுத்த மாதத்திலிருந்து புதிய பெண்கள் வைத்திய சிகிச்சை வார்ட்டாக மாற்றப்படும்.

104 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுவரும் புதியமேல்மாடி வார்ட்டை அடுத்த மாதம்முதல் வாரத்தில் இங்குவரும் சுகாதார அமைச்சர் திரு. சு. எம். சேனநாயகா திறந்து வைப்பார். [கா. நி]

# மனிதருள் சிங்கமாக திகழ்ந்தவர் வீரசிங்கம்

## பேராசிரியர் குலரத்தினம் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"மனிதருள் சிங்கமாகத் திகழ்ந்தார் திரு. வீரசிங்கம். கல்வித் துறையில் உயர்ந்த நிலையை அடைந்தது மாத்திரமல்ல சமூகத்தின் பெருந்தலைவராகவும் அவர் இருந்து வந்தார்."

யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற காலஞ்சென்ற முன்னாள் வட்டுக்கோட்டை எம். பியும் சமூகத் தொண்டருமான திரு. வி. வீரசிங்கத்தின் உருவப்பட திரைநீக்கவைபவத்தில் பேசிய பேராசிரியர் திரு. கே. குலரத்தினம் இவ்வாறு கூறினார்.

திரு. குலரத்தினம் தொடர்ந்து பேசுகையில், அன்றைய நிலையில் இவருடைய சமூக பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்து முன்னேற்றமடையச் செய்தவர் திரு. வீரசிங்கம் என்றும் தலைவர்களை உருவாக்கி வைத்தும் அவிக்கும் கொழுந்து முதல் முறைகாக பாடசாலைகளில் இலங்கையை உருவாக்கினார் என்றும் சமய வளர்ச்சிக்காகப் பாடுபட்டார் என்றும் கூறினார். அவருடைய அரசியல் இலட்சியமாக கூட்டுறவும் ஜனநாயகமும் இருந்தது என்று கூறிய திரு. குலரத்தினம் கூட்டுறவு இயக்கம் அவர் வைத்த அத்திவாரத்தில் உருவாகியது என்று கூறுவன் மிகையாகாது என்றார். யாழ். பொதுஜன நூலகத்திற்கு திரு. வீரசிங்கம் ஆற்றிய தொண்டுபற்றியும் திரு. குலரத்தினம் எடுத்துக் கூறினார்.

திரு. கே. பேரம்பலம், திரு. வீ. வீரசிங்கத்தின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

திரு. கே. முத்துவேலு, திரு. ஆர். இராசரத்தினம், திரு. வி. எவ். நவரத்தினம், திரு. வி. தங்கவேலு ஆகியோரும் உரையாற்றினர். (ந. நி.)

சாவகச்சேரி

# நகரசபைக் கூட்டத்தில் 2 அங்கத்தவர் வெளிநடப்பு

சாவகச்சேரி, வியா

சாவகச்சேரி நகரசபையின் விசேஷகூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நகரமண்டபத்தில் நகரசபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற போது 9-ம் வட்டார அங்கத்தவர் திரு. என். கே. மயில்வாகனம் சாவகச்சேரி மின்சார அத்தியட்சகர் மீது பொதுமக்களுக்கு சபைக்கும் நம்பிக்கையில்லையெனக் கொண்டு வந்த பிரேரணையை நகரசபைத் தலைவர் உட்படச் சில அங்கத்தவர்கள் வாபஸ் பெறுமாறு கோரினர். இதனை மறுத்த குறிப்பிட்ட அங்கத்தவரும் 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஆ. சுப்பிரமணியமும் சபையைவிட்டு வெளியேறினர்.

இக்கூட்டத்தில் சில அங்கத்தவர்கள் மின்சார அத்தியட்சகரின் சேவையைப் பாராட்டிப் பேசினர். மின்சார அத்தியட்சகரின் சேவை அச்சபைக்கு அவசியம் தேவையெனக்கொண்டு வந்த பிரேரணை சபையில் நிறைவேறியது. இத்தீர்மானத்தை உள்ளூராட்சி அமைச்சருக்கு அறிவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வடபகுதிக்கு

# மகா யாக பாத்திரைக் கோஷ்டி

நாவலப்பிட்டி, வியா.

நாவலப்பிட்டி ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமையில் இம்மாதம் 18-ந் திகதி யாத்திரைக் கோஷ்டியினர், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், வடபகுதி ஸ்தலங்களான நல்லூர், மாவிட்டபுரம், சந்நதி, நயினாதீவு, இராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்குச் செல்வர். இக் கோஷ்டியில் வரும் அன்பர்கள் ஆங்காங்கே மகா சொற்பொழிவுகள், கூட்டு வழிபாடுகள் நடாத்துவர்.

ஏழாலை ... இருந்து நல்லூர் தேர்த் திருவிழாவிற்கு இம்மாதம் 2-ம் திகதி காலை செல்லும் வடபகுதி கோஷ்டியிலும் ... யாக கோஷ்டி ... பஜனை செய் ...

# நன்நீர் உவர் நீராக மாறுகிறது

வரகாபொல, வியா.

நாரந்தனை தெற்குப் பகுதியில் சுருவில் வீதியால் பிரிக்கப்பட்ட குறுக்குச் சடலை எல்லையாகக் கொண்டுள்ள கிராமமொன்றில் சில கிணறுகளில் உள்ள நீரும் உப்பு நீராக மாறி வருகிறது. இதனால் இங்குள்ளவர்கள் குடி தண்ணீர் எடுக்க வேறு கிணறுகளுக்கு செல்ல வேண்டியிருக்கிறது.

## திருக்கேதீஸ்வரம் மகாகும்பாபிஷேக நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ கௌரியம்பாள் சமேத கேதீச்சரநாதர் ஆலய இராசகோபுரத்துக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் வரும் 19-ம் திகதி நிகழவிருக்கும் மகா கும்பாபிஷேகத்தின் வெளியீடாக திரு. ஆ. சுந்தையா எழுதியுள்ள திருக்கேதீச்சரம் எனும் நூல்வெளியீட்டுவிழா வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு திருக்கேதீச்சர வசந்த மண்டபத்தில் நடைபெறும். திருக்கேதீஸ்வர புனருத்தாரண சபைத் தலைவர் திரு. எஸ். சோமசுந்தரம் தலைமை தாங்கும் இவ் விழாவில் பல அறிஞர்கள் பாராட்டுரை வழங்குவர். இந்நூல் யாழ்ப்பாணம் ஸ்ரீ சாந்தா அச்சக உரிமையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளையின் வெளியீடாகும்.

## அபாயநிலை

உடுப்பிட்டி, வியா.

அல்வாய் தம்பசட்டிச் சந்தியிலிருந்து செல்லும் தம்பசட்டி வீதியில் தேநீர்க்கடைக்கு முன்றலில் உள்ள இரு மின்சார கம்பங்கள் எந்நேரமும் அடிசாயக்கூடிய அபாயநிலையிலுள்ளன. இவ்விரு மரக்கம்பங்களும் சரிந்துகொண்டிருக்கின்றன. இதனால் இப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர். இவ்வீதியிலுள்ள இதர கொங்கிறீற் மின்சாரக் கம்பங்களும் பல வருடங்களாகிவிட்டதால் உக்கி விட்டன.


# சளி சுரத்திற்கு துரிதமான வன்மையான நிவாரணம் தருவது டிஸ்பிரின்



டிஸ்பிரின், சளி சுரம், காய்ச்சல், தடிமல் முதலியவற்றின் தொல்லையிலிருந்து விரைவாக நிவாரணம் தருகிறது. டிஸ்பிரின் உட்கொண்டதும் உங்கள் காய்ச்சல் இறங்கும். சளி சுரத்தால் வரும் தலைவலியிலும் உடம்பு வலியிலுமிருந்து துரித நிவாரணம் கிடைக்கும்.

டிஸ்பிரின் துரித நிவாரணம் தரக் காரணம், இரத்தத்தில் அது விரைவாகச் செறிவதை உறுதி செய்யும் அதன் விசேஷ சேர்வை முறை. அதையொத்த கரையாத மற்ற மருந்துகள் போலன்றி டிஸ்பிரின் விரைவாகக் கரைகிறது. ஆகையால் அபாயகரமான கரையாத துகள்களை அது வயிற்றில் விட்டுவைப்பதில்லை. அதனால் தான் டிஸ்பிரின் பாவிப்பதற்கு மிகப் பாதுகாப்பானது.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அது, அதிக பாதுகாப்பானது. அதிக வன்மை வாய்ந்தது. அதிக துரிதமாகச் செயலாற்றுவது.

சளி சுரத்திலிருந்து துரிதமான நிவாரணம் பெற, இரண்டு டிஸ்பிரின் மாத்திரைகளை நீரில் கரைத்துப் பருகுங்கள்; அல்லது விழுங்குங்கள்

P 7488


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

